Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. CC.196/2013

Witness for Prosecution : PW4

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கராஜ் | Taluk | : |
| Father's / Husband Name | | Calling | : |
| Village | | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.03.2026

எதிரிகள் ஆஜராகவில்லை.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். கிருஷ்ணகிரி தாலுக்கா ஆய்வாளர் நகை திருட்டு சம்மந்தமாக என்னிடம் கையொப்பம் பெற்றார். கடந்த 18.10.2012 ஆம் தேதி மதியம் 02.00 மணியளவில் திம்மா (எ) திம்மராஜ் அவரது ஆஸ் பெட்டால்சீட் போட்ட வீட்டில் இருந்த பீரோவில் இருந்து 5 1/2 பவுன் தங்க செயின் திம்மா (எ) திம்மராஜ் எடுத்து ஆஜர் செய்தார். அதில் காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் பதிவு செய்தார். அந்த மகஜரில் நான் முதலவாதாக கையொப்பம் செய்தேன். கிராம உதவியாளர் இரண்டாவதாக அதில் கையொப்பம் செய்தார்.

கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். மேலும் இந்த நகை திருவண்ணாமலை ரோட்டில் பிள்ளக்கொட்டாய் அருகே முனியப்பன் சிலை அருகே உள்ள ஒரு பெண்ணிடம் ராமசாமி என்பவர் வண்டி ஓட்ட திம்மா (எ) திம்மராஜ் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். **என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** திம்மா (எ) திம்மராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் தரப்பில் மேற்படி ஒப்புதல் வாக்குமூல ஆவணம் நகல் என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தில் பல வழக்கு குற்ற

எண்கள் குறித்து இருப்பதால் இவ்வழக்கில் நகல் குறியீடு செய்வதாக அரசு தரப்பில் கூறப்பட்டதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்கிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் சமயத்தில் எங்கு கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வந்தேன் என்றால் கட்டிகாளப்பள்ளியில் பணிபுரிந்து வந்தேன். கிருஷ்ணகிரி ஹவுசிங்போர்ட் விளையாட்டு மைதானம் தங்கள் வருவாய் எல்லைக்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் அப்போது எங்கு குடியிருந்தேன் என்றால் கிருஷ்ணகிரியில் குடியிருந்தேன். எனது உதவியாளர் எங்கு குடியிருந்தார் என்றால் கிருஷ்ணகிரி லண்டன் பேட்டையில் குடியிருந்தார். எனக்கு எப்போது போலீசாரால் தகவல் பெறப்பட்டது என்றால் காலை 07.00 மணிக்கு பெறப்பட்டது. என்ன தகவல் வந்தது என்றால் நகை திருட்டு சம்மந்தமாக ஒரு இடத்தில் வைத்திருப்பதாக கூறினார்கள். கிராம உதவிளாரை யார் அழைத்து வந்தது போலீசாரா என்றால் இல்லை, நான் தகவல் சொல்லி அழைத்து சென்றேன். நான் எத்தனை மணிக்கு அங்கு சென்றேன் என்றால் 07.00 மணிக்கு சென்றேன்.

ஒப்புதல் வாக்குமூலம் நடைபெற எவ்வளவு நேரம் ஆனது என்றால் 02.00 மணி நேரம் ஆனது. 10.00 மணிக்கு முடிந்துவிட்டது என்றால் சரிதான். விசாரணைக்காக உயர் அதிகாரியிடம் ஒப்புதல் பெற்றீர்களா என்றால் வருவாய் ஆய்வாளரிடம் தகவல் சொல்லிவிட்டு சென்றேன். தகவல் அளித்ததற்கான ஆவணம் எதுவும் காவலரிடம் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் கிருஷ்ணகிரியில் உள்ள வழக்குகள் உட்பட பல வழக்குகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வருவாய் எல்லைக்கு உட்பட்ட பகுதிக்கு சம்மந்தப்பட்ட இடங்களில் திருடு போனதாக நகை எதுவும் இல்லை என்றால் சரிதான். 4,5 இடங்களில் திருடு போனதாக சொல்லப்படும் நிலையில் அந்த காவல் நிலைய ஆய்வாளர்கள் அல்லது போலீசார் இருந்தார்களா என்றால் இல்லை. எத்தனை போலீசார் அங்கு இருந்திருப்பார்கள் என்றால் 4 நபர்கள் இருந்தார்கள். எந்த காவல் நிலையத்தை சேர்ந்த காவலர்கள் என்றால் கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய போலீசார் இருந்தார்கள்.

கிருஷ்ணகிரி தாலுக்கா காவல் நிலைய அதிகாரி பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

மத்தூர் காவல் ஆய்வாளர் பதிவு செய்ததாக என் பெயரிலோ நான் கையொப்பம் செய்ததாக ஆவணங்களோ, வாக்குமூலங்களோ எதேனும் இருந்தால் அது என்னுடையது அல்ல என்றால் சரிதான். நகைகள் கைப்பற்றி இருப்பதாக சொல்வதில் எந்த இடத்தில் வைத்து என்றால் தேன்கனிக்கோட்டை. தேன்கனிக்கோட்டையில் நகைகள் கைப்பற்றப்பட்டபோதும் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அவர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். மத்தூர் காவல் நிலைய போலீசாரா, காவல் நிலைய அதிகாரி தயாரித்த கைப்பற்றுதல் மகஜரில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

திம்மா(எ) திம்மராஜ் இவர்தான் என்பதை நான் உறுதிப்படுத்திக்கொண்டேனா என்றால் இல்லை. ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தது திம்மா(எ) திம்மராஜ் என்று எனக்கு உறுதியாக தெரியாது என்றால் நான் உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை. நான் சொல்வது போன்று எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கப்படவில்லை, எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை, போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என்னுடன் கிராம உதவியாளர் உடன் வந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்பாக கைப்பற்றப்பட்டது 5 1/2 பவுன் செயின் தான் என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/–D.Saravanan,B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)

Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. CC.196/2013

Witness for Prosecution : PW5

Name செந்தாமரை Taluk :

Father's / Husband Name அன்சர் Calling :

Village கிருஷ்ணகிரி Age : 64

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 17.03.2026

எதிரிகள் ஆஜராகவில்லை.

**முதல் விசாரணை**

நான் மத்தூர் காவல் நிலையத்தில் 21.06.2012 ஆம் தேதி அலுவலில் இருந்தபோது ராணி வயது 52 க/பெ. வடிவேல் பிள்ளக்கொட்டாய் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் வாக்குமூலத்தை பெற்று நிலைய குற்ற எண்.164/2012 பிரிவு 392 இதசவாக Express முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்தும், போச்சம்பள்ளி நீதிமன்றத்திற்கு அசல் நகலை அனுப்பியும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பியும் மேற்கொண்டு நகலை விசாரணைக்காக காவல் ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். அது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு குறித்து எந்த புலன் விசாரணையும் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் விசாரணை செய்தார் அவ்வாறு விசாரணை செய்து இருந்தால் வாக்குமூலம் பதிவு செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி இருப்பார் என்றால் என்னை விசாரணை செய்தார்.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-D.Saravanan,B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)